# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.

முன்னிலை :- **திரு. D. மாரிக்காளை, பி.எஸ்ஸி., எம்.எல்.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் நாள் செவ்வாய்கிழமை

## அசல் வழக்கு எண் 406/2015

சாந்தம்மாள் .. வாதி

/எதிர்/

1. தங்கமணி
2. கடற்கன்னி
3. பரமசிவம்
4. சின்னமாரியப்பன்
5. சண்முகவேல்
6. ஜெபசிங்
7. பால்ராஜ்
8. வேதமாணிக்கம்
9. அப்பாத்துரை .. பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன் 10.04.2018 அன்று விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். எஸ். சுப்பையா அவர்களும், 1, 2-ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். புஸ்பராஜ் அவர்களும் முன்னிலையான நிலையில் 3 முதல் 9 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ள நிலையில் இவ்வழக்கானது 03.04.2018 தேதியன்று விசாரணைக்கு வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் போதியகால அவகாசம் வழங்கப்பட்டும் வாதி விசாரணைக்கு ஆஜராகாததாலும் இன்று வாதியை நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாததாலும் இந்நீதிமன்றம் கீழக்கண்டவாறு வழங்கும்

## தீர்ப்புரை

அ. பிராதின் 2வது தபசில் சொத்து உபயவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொது

நடைபாதையென தீர்மானித்து அதற்கு அனுசரணையாக வாதி எப்போதும்போல் பிராதின் 2வது தபசில் சொத்தை பொதுநடைபாதையாக பயன்படுத்தி அனுபவம் செய்து வருவதை இந்த 1ம் பிரதிவாதியோ அவரின் வாரிசுகளோ, வகையாட்களோ, வேலையாட்களோ, ஏஜண்ட்களோ அல்லது மற்றவர்களோ யாதொரு விதத்திலும் எவ்வித இடையூறும் செய்யாதிருக்கும் பொருட்டு இந்த 1ம் பிரதிவாதி வகையறாக்கள் மீது ஒரு நிரந்தர ஏவுகட்டளை உத்தரவு பிறப்புவிக்கும்படிக்கும்,

ஆ. பிராதின் 2வது தபசில் சொத்தின் ஒரு பகுதியில் இந்த 1ம் பிரதிவாதி நூதனமாக ஏற்படுத்தியுள்ள 3வது தபசில் அமைப்புகளை சமூக மன்றம் நிர்ணயிக்கும் ஓர்தினத்திற்குள் அப்புறப்படுத்திப் போகும்படிக்கும், தவறும் பட்சத்தில் வாதியே சமூகம் மன்றம் மூலமாக இந்த 1ம் பிரதிவாதியின் செலவில் அப்புறப்படுத்திப்போகும் வகையில் ஒரு வலியுறுத்துக்கட்டளை உத்தரவு பிறப்புவிக்கும்படிக்கும்,

இ இவ்வழக்கின் செலவுத்தொகை வாதிக்கு இந்த 1ம் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கும்படிக்கும் கேட்டு வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. வழக்குரை, எதிர் வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் தீர்வுக்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.

**1. பிராது 2வது தபசில் சொத்து உபயவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொது பாதை என்பது சரியா?**

**2. பிராது 2வது தபசில் சொத்தைப் பொறுத்து வாதி கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியதா?**

**3. பிராது 2வது தபசில் சொத்தைப் பொறுத்து வாதி கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்க கூடியதா?**

**4. பிராது 2ம் தபசில் சொத்தில் ஒரு பகுதியில் 1ம் பிரதிவாதி அமைத்துள்ள 3ம் தபசில் சொத்தைப்பொறுத்து வாதி கோரும் வலியுறுத்துக்கட்டளை**

**வாதிக்கு கிடைக்க கூடியதா?**

. **5. .வாதிக்கு கிடைக்க கூடிய வேறு பரிகாரம் என்ன?**

This suit is listed for Trial on 03.04.2018. Both side counsels present. Sufficient time already granted for Trial. Plaintiff is called absent and this suit is dismissed for Default. No cost.

2018-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10-ம் நாள் இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப்பகரப்பட்டது.

(ஒம்)/D.மாரிக்காளை
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
சங்கரன்கோவில்.

வாதி, பிரதிவாதிகள் தரப்பு சாட்சி

சான்றாவணங்கள் .. இல்லை

மு.மா.உ.நீ.